# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

## பணிப்பாளர் / உடற் கல்வி

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மேல்வரும் பதவிக்கு பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து 30.12.2020 வரை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்.

**கல்வித் தகைமைகள்**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் உடற் கல்விப் பிரிவில் பட்டம் அல்லது அதற்குச் சமனான பட்டம் அத்துடன் பட்டத்தின் பின்னர் உடற் கல்வி நிகழ்ச்சிகளை ஒழுக்குபடுத்தி நடாத்துவதில் குறைந்தது பத்து (10) வருட அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில / உயர் கல்வி நிறுவனத்தில் பட்டம் அத்துடன் உடற் கல்விப் பிரிவில் பட்டப்பின் படிப்பு அல்லது இத்துறையில் தொழில் சார் தகைமைகள் அத்துடன் முதல் பட்டத்தின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் உடற் கல்வி நிகழ்ச்சிகளை ஒழுக்குபடுத்தி நடாத்துவதில் குறைந்தது பன்னிரெண்டு (12) வருட அனுபவம்.

**அல்லது**

இ) பல்கலைக்கழக முறைமையில் உதவி பணிப்பாளர் / உடற் கல்வி பதவியில் ஐந்து (05) வருடத்திற்கு குறையாத அனுபவத்துடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:** U-EX 2(II) - Rs. 66,180 - 8x1,335; 8x1,630 – 89,900 p.m.

(மேற்படி சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

**அனுகூலங்கள்**

- தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 10% பல்கலைக்கழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும் அதே வேளை தொழில் வழங்குனர் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 15% வீதத்தினை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவர் அதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும் 7% பல்கலைக்ககழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கும் செல்லுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பல்கலைக்கழகம் அவரது மாதாந்த சம்பளத்தின் 3% தொகையினை பங்களிப்புச்செய்யும்.

- சிரேஸ்ட நிருவாக உத்தியோகத்தர்கள் 07 வருட சேவை முடிவின் பேரில் முழுச் சம்பளத்துடனான 01 வருடம் ஏழாட்டை விடுமுறை (Sabbatical Leave) அல்லது சம்பளமற்ற 02 வருட ஏழாட்டை விடுமுறைக்கு உரித்துடையவராவார். இந்த விடுமுறையில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர் அவரது வாழ்க்கைத்துணையுடன் செல்வதற்கான முழு விமானச் சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

***விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்***

விண்ணப்பப்படிவம், தேவையான தகைமைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை பல்கலைக்கழகத்தின் www.seu.ac.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா. 200.00 செலுத்திய பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். இக் கட்டணத்தினை மக்கள் வங்கியின் அட்டாளைச்சேனை கிளையிலுள்ள **228-1001-9000-1704** எனும் இலக்கம் கொண்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்கிற்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் **பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா ஒலுவில் - 32360** எனும் முகவரிக்கு 30.12.2020ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடதுபக்க மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவருடாக அனுப்புதல் வேண்டும். ஆயினும் அதன் முற்பிரதி ஒன்றை நேரடியாக அனுப்பிவைக்கலாம். எவ்வாறாயினும் நிறுவனத் தலைவருடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

பூரணமற்ற, தெளிவில்லாத மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பிறகு பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு பட்டியல் படுத்தும் உரிமையை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தன்வசம் வைத்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு பட்டியல் படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் - 32360
26.11.2020